செ.வெ.எண்-22 நாள்-12.01.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 2020-21-ம் ஆண்டில் 35 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்திட இலக்கீடு பெறப்பட்டு வேளாண் இயந்திரங்கள் வாங்கிட உழவர் உற்பத்தியாளர் குழு நிர்வாகிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் விற்பனையாளர்கள் கூட்டம் (Buyers Seller Meeting) மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (12.01.2021) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது,**

அரியலூர் மாவட்டத்தில் கூட்டுப்பண்ணையம் திட்டம், தமிழக விவசாயிகள் 92 சதவீதம் சிறு குறு விவசாயிகள் சாகுபடிக்குத் தேவையான தொழில் நுட்பங்களையும், வங்கி கடன் வசதிகளையும், தனது விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பதிலும் முழுமையான திறன் பெற்றவர்களாக இல்லை. எனவே தான் கூட்டுப்பண்ணையம் என்ற உன்னத திட்டத்தினை, தமிழக அரசு வேளாண்மைத்துறை 2017-18 நிதி அறிக்கையில் இத்திட்டம் அறிவித்து, சிறு குறு விவசாயிகளை 20 நபர் கொண்ட உழவர் ஆர்வலர் குழுக்களாகவும், 5 உழவர் ஆர்வலர் குழுக்களை இணைத்து 100 நபர் கொண்ட உழவர் உற்பத்தியாளர் குழுவாகவும் இணைத்து சாகுபடி செய்யும் திட்டமாக அறிவித்து செயல்படுத்துகிறது. அவ்வாறு உருவாக்கப்படும் ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவுக்கு ரூ.5.00 இலட்சம் தொகுப்பு நிதி அளித்து பண்ணைக்கருவிகள் வாங்கி குழுவில் உள்ள 100 விவசாயிகளையும் கூட்டாக உபயோகித்துக் கொள்ள வகை செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 100 விவசாயிகள் கொண்ட ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவும், ஒரு பருவத்தில், ஒரு பயிரில், ஒரே இரகத்தை அதிக பரப்பில் சாகுபடி செய்வதும், திட்டமிட்டு இடுபொருட்கள் வாங்குவதிலிருந்து மதிப்புக்கூட்டி விற்பனை செய்வது வரை கூட்டாக செயல்படுத்துவதும், உயரிய தொழில்நுட்பங்களை ஒரு சேர கடைபிடித்து, நிதி உதவியையும் உடனுக்குடன் பெற்று, மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கான முயற்சிகளையும் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மேற்கொள்ள முடிவதால், செலவை குறைத்து வருவாயை அதிகரிக்க இயலும்.

அரியலூர் மாவட்டத்தில் 2017-18 முதல் 2019-20 ஆண்டு வரை 113 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒரு குழுவிற்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 464 பண்ணைக்கருவிகள் வாங்கிட ரூ.564.97 இலட்சம் தொகுப்பு நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 11300 விவசாயிகள் நேரிடையாக பயன்பெற்று வருகின்றனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் இரா.பழனிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வே) சு.சண்முகம், தோட்டக்கலை துணை இயக்குநர் அன்புராஜன், செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திரு.கருப்புசாமி, அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், உழவர் உற்பத்தியாளர் குழு நிர்வாகிகள் மற்றும் வேளாண் இயந்திர விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**